



திருப்பூர் வடக்கு மாவட்டம், திருமுருகன்பூண்டி, ராக்கியாபாளையத்தில் கலைஞர் அறிவாலயத்தை மாவட்ட கழகப் பொறுப்பாளர், மாநகராட்சி முன்னாள் மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில் திருமுருகன் பூண்டி நகர கழக செயலாளர் கிருஷ்ணசாமி (எ) மூர்த்தி நகர் மன்ற தலைவர் குமார் முன்னிலையில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். இதில் மாவட்ட அவைத்தலைவர் க.நடராஜன், நகர கழக துணைச் செயலாளர் தேஜஸ் மூர்த்தி, பொருளாளர் அப்பாஸ், மாவட்டப் பிரதிநிதி மாணிக்க மூர்த்தி, நகர்மன்ற உறுப்பினர்கள் சுஜினி சதீஷ்குமார், மதிவாணன், ராஜன், வார்டு செயலாளர் சிவக்குமார் உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருமயம் தொகுதி சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி எம்.எல். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் மாணவ, மாணவிகள் அனிதா, ராமச்சந்திரன், திருவாசகம், ஜலாலுதீன், முரசொலி மாறன், செல்வகுமார் ஆகியோருக்கு கல்வி உதவித்தொகை வழங்கினார். நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் அழகு.சிதம்பரம், ஆர்.கணேசன், கலை, இரா.மேகநாதன், அருண்சேகர், ஜான் பீட்டர், முல்லை ரமேஷ், சாமி சுரேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### கன்னியாகுமரி மாவட்டத்தில் அணுக் கனிமச் சுரங்கம் அமைக்க IREL நிறுவனத்திற்கு அளித்த கால நீட்டிப்பு கண்டனத்திற்குரியது!

# ஓராண்டு கால நீட்டிப்பு உத்தரவை உடனே ரத்து செய்க!

## எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ. கோரிக்கை!



கன்னியாகுமரி, ஜூலை 3-

கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினர் ஆஸ்டின் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

கன்னியாகுமரி மாவட்டத்தில் அணுக்கனிமச் சுரங்கம் அமைப்பதற்கு IREL ஆலைக்கு 1 ஆண்டு கால அவகாசத்தை நீடித்து கொடுத்துள்ள த.வெ.க. அரசுக்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தாலுகாவிற்குட்பட்ட கீழ் மிடாலம் A, மேல்மிடலாம் B, இனயம் புத்தன்துறை, ஏழுதேசம் A,B மற்றும் கொல்லங்கோடு A,B,C வருவாய் கிராமங்களுக்குக் குட்பட்ட பகுதியில் 1144.618 ஹெக்டேர் நிலங்களில் அணுக்கனிமச் சுரங்கம் அமைத்து இல்மனேட் சிர்கான் புளூடோனியம் மோனோசைட் தோரியம் போன்ற கனிமங்களை பிரித்தெடுப்பதற்கு இந்திய அரிய மணல் ஆலை நிறுவனத்திற்கு (IREL) தமிழ்நாடு அரசு மூலம் அனைத்து தடையில்லா சான்றுகளையும் பெற்று ஆலை தொடங்குவதற்கு IREL நிறுவனத்திற்கு 10.6.2026 வரை 5 ஆண்டு காலம் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. அந்த கால அவகாசம் முடிவடைய இருந்த நிலையில்- இது தொடர்பாக ஒன்றிய அரசு கடந்த காலங்களில் தமிழ்நாடு அரசிற்கு பல முறை கடிதம் மூலம் தடையில்லா சான்றுகள் வழங்கி ஆலைக்கான அனுமதி வழங்கிட அழுத்தம் கொடுத்தது. இத்திட்டம் அமைந்தால் சுற்று சூழல் பாதிக்கப்பட்டு புற்று நோய் பாதிப்பு அதிகரிக்கும். நிலத்தடி நீர் பாதிப்புள்ளாகும். கடலரிப்பு ஏற்பட்டு கடற்கரை கிராமங்களை அழிவிற்குள்ளாக்கும். விவசாய நிலங்களில் கடல் நீர் புகுந்து விவசாயம் பாதிப்பிற்குள்ளாகும். எனவே இத்திட்டத்தை கை விட வேண்டும் என அப்பகுதி பொது மக்கள் போராட்டம் நடத்தினர்.

எங்கள் கழகத் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது போராடிய மக்களின் பிரதிநிதிகளை 24.03.2025 அன்று அழைத்துப் பேசி “மக்களை பாதிக்கும் எந்த திட்டத்தையும் இந்த அரசு அனுமதிக்காது. இத்திட்டத்தை கைவிட கேட்டு ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுப்போம். சுற்று சூழல் அனுமதி மாநில அரசு வழங்காது. வாழ்வாதாரத்திற்காக போராடும் மக்களுடன் இந்த அரசு துணையாக நிற்கும்” என வாக்குறுதி வழங்கினார்கள். அந்த அடிப்படையில் கடந்த ஐந்தாண்டு காலமாக IREL-க்கு எந்த வித அனுமதியும் திராவிட மாடல் அரசு வழங்கவில்லை. ஒன்றிய அரசு இதில் மக்கள் கருத்து கேட்பு நடத்த வேண்டியதில்லை என ஒரு திருத்தத்தை கொண்டு வந்து மாநில அரசு நிலம் கையகப்படுத்தி வழங்க வேண்டும் என மாநில அரசுக்கு நிர்ப்பந்தம் கொடுத்த போதிலும்- எங்கள் கழகத் தலைவர் முதலமைச்சராக இருந்த வரை எந்த நிர்பந்தத்திற்கும் அடிபணியவில்லை. எந்த அனுமதியும் வழங்கவுமில்லை.

ஏற்கனவே ஒன்றிய அரசு IREL நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட 5 ஆண்டு கால கால அவகாசம் 10.06.2026 அன்று முடிவடைகிற நிலையில்- IREL நிறுவனத்திற்கு மேலும் ஒரு ஆண்டு கால அவகாசம் நீடித்து வழங்க வேண்டுமென கோரியதனை ஏற்று, ஒன்றிய அரசின் அழுத்தத்திற்கு அடிபணிந்து தற்போதைய த.வெ.க. அரசு 10.06.2026 முதல் மேலும் ஒரு ஆண்டு காலம் கால அவகாசத்தை நீட்டித்து கொடுத்து அரசாணை வெளியிட்டுள்ளது கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்ட மக்களுக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. மக்கள் விரோத நிலைப்பாட்டை எடுத்து-த.வெ.க. அரசு வழங்கியுள்ள இந்த கால அவகாசம் வன்மையாக கண்டிக்கத்தக்கது. முதலமைச்சர் ஜோசப் விஜய் அரசின் இந்த உத்தரவு அந்த பகுதி மக்கள் குறிப்பாக மீனவர்கள் மத்தியில் மிகவும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. புதிய கால நீடிப்பு ஆணையை இந்த அரசு வழங்காமல் இருந்திருந்தால் இந்த திட்டமே கைவிடப்பட்டிருக்கும். இந்த அரசின் மக்கள் விரோத செயலால் IREL நிறுவனம் ஒன்றிய அரசின் மூலம் மாநில அரசுக்கு அழுத்தம் கொடுத்து அனைத்து தடையில்லா சான்று மற்றும் அனுமதிகளையும் பெற்று ஆலையை தொடங்கிவிடும் அபாயம் இப்போது ஏற்பட்டுள்ளது.

ஆட்சிக்கு வருவதற்கு முன்பு 2024 நவம்பரில் நடந்த த.வெ.க. செயற்குழு கூட்டத்தில் “இத்திட்டத்திற்கு அனுமதி வழங்க கூடாது” என IREL நிறுவனத்திற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றிவிட்டு தற்போது ஒன்றிய அரசிற்கு அடி பணிந்து மக்கள் விரோத ஆணையை வழங்கி உள்ளதை இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் பா.ஜ.க. அரசுக்கும்- தவெக அரசுக்கும் உள்ள நெருக்கத்தை வெளிப்படுத்துகிறது. 5 ஆண்டு காலம் தி.மு.க. அரசு அனுமதி வழங்காத இத்திட்டத்திற்கு ஒன்றிய அரசின் மிரட்டலுக்கு பயந்து IREL-க்கு அனுமதி வழங்கி மாவட்டத்தையே அழிக்க துணிந்து விட்டது த.வெ.க. அரசு.

எனவே IREL நிறுவனத்திற்கு தற்போது வழங்கியுள்ள கால அவகாச நீட்டிப்பு அரசாணையை ரத்து செய்து உடனடியாக ஆணை வெளியிட வேண்டும் என்றும், இல்லையென்றால் இப்பகுதி மக்கள் ஒன்றாகத் திரண்டு த.வெ.க. அரசின் மக்கள் விரோத செயலுக்கு எதிராக மிகப் பெரிய போராட்டங்களை முன்னெடுப்பார்கள் என எச்சரிக்கையாக தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### நாகப்பட்டினம் வி. செல்வராஜ் எம்.பி.யின் தந்தை

# வைத்திலிங்கம் மறைவு!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை.3-

நாகை வி.செல்வராஜ் எம்.பி.யின் தந்தை வைத்தியலிங்கம் அவர்கள் மறைந்த செய்தியறிந்து, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் வி. செல்வராஜ் அவர்களின் தந்தையார் திரு. வைத்திலிங்கம் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து வேதனையடைந்தேன்.


அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினர்களுக்கும் தோழர்களுக்கும் எனது ஆறுதலை உரித்தாக்குகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை எஸ்.ஏ. இராஜமாணிக்கம்

### ஜூலை 3 (1998)



சுயமரியாதை இயக்க ஆரம்பகால தொண்டர், திராவிட முன்னேற்றக் கழகத்தில் வட்டச் செயலாளர் பொறுப்பில் தொடங்கி நகரச் செயலாளர், மாவட்டச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை ஏற்று கோவை மாவட்டத்தில் கழகம் வளர்க்க அரும்பாடுபட்டவர்.

கோவை மாவட்டத்தில் தலைவர் கலைஞர் தங்கியிருந்தபோது, அன்றாடம் கலைஞர் அவர்களை சந்தித்து உரையாடக்கூடிய வாய்ப்பைப் பெற்றவர்.

நகர்மன்ற உறுப்பினர், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.

மும்முனைப் போராட்டம், கருப்புக் கொடி போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் பங்கேற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தல்:

# தி.மு.க. தலைவரைச் சந்தித்து ஆலோசனை!

## புதுச்சேரி தி.மு.க. நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!



புதுச்சேரி, ஜூலை 3 –

புதுச்சேரி மாநில திமுக நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம் லப்போர்த் வீதியில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நடந்தது.

மாநில கழக அமைப்பாளர் இரா.சிவா தலைமை தாங்கினார். அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில துணை அமைப் பாளர் அ. தைரியநாதன் வரவேற்று பேசினார்.

தட்டாஞ்சாவடி தொகுதி இடைத் தேர்தல் சம்பந்தமாக புதுச்சேரி மாநில நிர்வாகிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டு, அக்குழு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து தொகுதியின் தற்போதைய நிலவரம் குறித்தும், தி.மு.க. வெற்றி வாய்ப்பு குறித்தும், வேட்பாளர் தேர்வு தொடர்பாக விளக்கம் அளிப்பது என்றும் கழகத் தலைவர் அறிவிக்கும் வேட்பாளரை முழு வீச்சில் தேர்தல் பணியாற்றி வெற்றி பெற செய்வது என்றும் கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் வே. கார்த்திகேயன், அ. செந்தில் (எ) ரமேஷ், விக்னேஷ் கண்ணன்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ. மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், லோகையன், அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ். கோபால், தங்கவேலு, வேலன், தர்மராஜ் இளம்பரிதி, செந்தில்குமார், அமுதாகுமார், நிர்கீஸ், தொகுதி செயலாளர்கள் சக்திவேல், வடிவேல், ராஜா, சீத்தாராமன், ராஜாராமன், சக்திவேல், இளஞ்செழிப் பாண்டியன், கலியகார்த்திகேயன், பாண்டு அரிகிருஷ்ணன், நடராஜன், ஆறுமுகம், மணிகண்டன், சத்தியவேலு, சிவக்குமார், முருகதாஸ், சவுரிராஜன், மோகன், மகளிர் அணி அமைப்பாளர் காயத்ரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் ஏழை எளிய – நடுத்தர மக்கள் கடுமையாகப் பாதிப்பு!

# அரிசி விலை கடும் உயர்வு! த.வெ.க. அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

## கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி தலைவர் ஈ.ஆர்.ஈஸ்வரன் கேள்வி!



சென்னை, ஜூலை 3 -

தமிழ்நாட்டில் அரிசி விலை கிலோவுக்கு ரூ5 முதல் ரூ10 வரை அதிகரித்துள்ளது. சீரகசம்பா அரிசி கிலோவிற்கு ரூபாய் 96 வரை விற்கப்படுகிறது. இந்த விலை உயர்வு ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தை கடுமையான பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது.

ஆந்திரா, தெலுங்கானாவில் கடந்த ஆண்டில் கோடை மழை மற்றும் பருவமழை சரி வர பெய்யாததால் தற்போதைய சாகுபடியும் குறைந்து வருகிறது. தமிழகத்திலும் கர்நாடக அரசு தமிழகத்திற்கு தேவையான தண்ணீரை திறந்து விடாததாலும் குருவை சாகுபடியை உறுதி செய்ய இயலவில்லை. இதனால் தமிழகத்திலும் நெல் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

அரிசியின் விலை நாளுக்கு நாள் உயர்வதால் ஏழை மற்றும் நடுத்தர மக்களை பெரும் கவலையில் ஆழ்த்தியுள்ளது. நெல் உற்பத்தி குறைவு மற்றும் நெல் பற்றாக்குறையால் வரும் காலங்களில் அரிசி விலை மேலும் கடுமையாக உயர வாய்ப்புள்ளது.

மேலும் அரிசி விலை உயர்வுக்கு டீசல் விலை உயர்வும் காரணம். லாரி வாடகை அதிகரித்ததும் முக்கிய காரணமாகும். இதுபோன்ற பல காரணங்களால் அரிசி விலை உயர்வு என்பது ஏழை மற்றும் நடுத்தர மக்களை கடுமையாக பாதிப்படைய செய்துள்ளது.

இவ் விலை உயர்வை உணர்ந்து தமிழக அரசு இதுவரை எடுத்த நடவடிக்கை என்ன? இது சம்பந்தமாக துறைசார்ந்த அமைச்சர் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகளை வைத்து அரிசி விலையை கட்டுப்படுத்த ஆலோசனைக் கூட்டம் நடத்தாதது ஏன்?

மாற்றுக் கட்சி நிர்வாகிகளை தங்கள் கட்சியில் சேர்ப்பதற்கு காட்டும் அக்கறையை ஏழை, எளிய மக்களின் மீது காட்ட வேண்டும். இது போன்ற நிலைகளை உன்னிப்பாக கவனித்து விலையேற்றத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சித்தலைவர் ஈ.ஆர்.ஈஸ்வரன் த.வெ.க. அரசுக்கு கேள்வி எழுப்பியுள்ளார்.

### ராமர் கோயில் நன்கொடை மோசடி விவகாரம்:

# அயோத்தியில் கட்டுக்கட்டாக பணம், தங்கம், வெள்ளி பறிமுதல்!

## போலீஸ் அதிரடி சோதனையில் சிக்கியது!

அயோத்தி, ஜூலை 3 -

ராமர் கோயில் நன்கொடை மோசடி தொடர்பான விசாரணையின் ஒரு பகுதியாக, அயோத்தியில் காவல்துறையினர் புதிய சோதனைகளை மேற்கொண்டனர்.

இதில் க்யூஆர் குறியீடு கொண்ட நன்கொடைப் பெட்டி, ரொக்கம், தங்கம், வெள்ளி மற்றும் வெளிநாட்டு நாணயம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டதாக காவல் துறை வட்டாரங்கள் தெரிவித்தன. அயோத்தி ராமர் கோயில் நன்கொடை மோசடி விவகாரம் நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

உத்தரப் பிரதேச அரசால் அமைக்கப்பட்ட சிறப்பு விசாரணைக் குழு ஜூன் 23 அன்று தனது முதற்கட்ட ஆய்வறிக்கையைச் சமர்ப்பித்தது. அதைத் தொடர்ந்து ஜூன் 25 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, கோயில் நன்கொடை எண்ணும் பணியில் ஈடுபட்டிருந்த 8 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த சர்ச்சைக்கு தார்மீகப் பொறுப்பேற்று சமீபத்தில் ராஜினாமா செய்வதாக அறிவித்திருந்த ஸ்ரீ ராம ஜென்மபூமி தீர்த்த க்ஷேத்ரா அறக்கட்டளையின் பொதுச் செயலாளர் சம்பத் ராயின் வாக்குமூலத்தையும் போலீசார் பதிவு செய்தனர்.

மேலும் சிறப்பு விசாரணைக்குழுவினர் நீதிமன்ற அனுமதியைப் பெற்று, மாவட்டச் சிறையில் இருந்த குற்றம் சாட்டப்பட்ட அவினாஷ் சுக்லா என்பவரிடம் இந்த மோசடி தொடர்பாக விசாரணை நடத்தியபோது, இவ்வழக்கில் கூடுதல் தகவல்கள் கிடைத்தன. இதையடுத்து இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட பலரது வீடுகளில் அயோத்தி போலீசார் மற்றும் சிறப்பு புலனாய்வு குழுவினர் அதிரடி சோதனை நடத்தினார்கள்.

குற்றம் சாட்டப்பட்ட லவ்குஷ் மிஸ்ராவின் வீட்டில், காய்ந்த வைக்கோல் கட்டுகளுக்கு இடையே காவல்துறையினர் தீவிர சோதனையை மேற்கொண்டனர்.

விசாரணைக்காக லவ்குஷின் தந்தை பச்சு லால் மிஸ்ரா காவலில் எடுக்கப்பட்டார். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அவினாஷ் சுக்லாவிடமிருந்து ரூ. 20.39 லட்சம், கருணேஷ் பாண்டேவிடமிருந்து ரூ. 18.07 லட்சம், அனுகல்ப் மிஸ்ராவிடமிருந்து ரூ. 16.82 லட்சம், லவ்குஷ் மிஸ்ராவிடமிருந்து ரூ. 14.25 லட்சம், ராமசங்கர் மிஸ்ராவிடமிருந்து ரூ. 7.32 லட்சம் மற்றும் ‘டின்னு’ என்று அழைக்கப்படும் ராமசங்கர் யாதவிடமிருந்து ரூ. 1 லட்சம் ஆகிய பறிமுதல் செய்யப்பட்டன.

மேலும், விசாரணையின் போது சுமார் 11 கிராம் தங்கம், சுமார் 375 கிராம் வெள்ளி மற்றும் 1,121 அமெரிக்க டாலர்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அவினாஷ் சுக்லா கடந்த 10 ஆண்டுகளாகத் தங்கியிருந்த அயோத்தியில் உள்ள ஒரு யோகா மையத்திலிருந்து, ராமராஜ்ய கோஷ் என்று பெயரிடப்பட்ட பேடிஎம் க்யூஆர் குறியீடு கொண்ட நன்கொடைப் பெட்டியை காவல் துறையினர் மீட்டனர்.

அந்த மையத்தின் யோகா பயிற்சியாளரான சுந்தர் லால் கூறுகையில், காவல்துறையினர் முதலில் ஜூன் 5 அன்று அந்த வளாகத்தில் சோதனை நடத்தி, சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்து, சுக்லா தங்கியிருந்த அறையைச் சோதனையிட்டதாகத் தெரிவித்தார். இதற்கிடையே அயோத்தி ராமர் கோயில் வளாகத்தில் பணியமர்த்தப்பட்டிருந்த சுமார் 400 தனியார் பாதுகாப்புப் பணியாளர்களின் பங்கும் இந்த விசாரணையில் ஆராயப்பட்டு வருகிறது.